இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 338 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆடி 02 – வியாழக்கிழமை 18 ஜுலை 2024 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 338 : Thiruvalluvar Year - 2055 - Aadi 02 - Thursday 18 July 2024 - Trichy ★★ 8 Pages ₹ 5.00





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (16.7.2024) தலைமைச் செயலகத்தில், காவிரி நதிநீரில் தமிழ்நாட்டின் உரிமைகளை பாதுகாக்கும் வகையிலும், கர்நாடக அரசிடமிருந்து தமிழ்நாட்டிற்கு காவிரி நீரைப் பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்தும் சட்டமன்ற அனைத்துக் கட்சி தலைவர்களின் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் பி.வில்சன், ஆர்.எஸ்.பாரதி, அ.தி.மு.க. சார்பில் எஸ்.பி.வேலுமணி, ஓ.எஸ்.மணியன், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் கு.செல்வப்பெருந்தகை, செ. ராஜேஷ்குமார், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் ஜி.கே.மணி மற்றும் சதாசிவம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் அதன் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன் மற்றும் எஸ்.எஸ்.பாலாஜி, பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் கரு.நாகராஜன், கருப்பு முருகானந்தம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வி.பி.நாகைமாலி மற்றும் பி. சண்முகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் டி.இராமச்சந்திரன் மற்றும் மூ.வீரபாண்டியன், மனிதநேய மக்கள் கட்சியின் சார்பில் எம்.எச்.ஜவாஹிருல்லா, புதுமடம் அலீம், கொங்கு மக்கள் தேசியக் கட்சியின் சார்பில் ஈ.ஆர்.ஈஸ்வரன் மற்றும் சூரியமூர்த்தி, புரட்சி பாரதம் கட்சியின் சார்பில் பூவை எம்.ஜெகன்மூர்த்தி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சதன் திருமலைக் குமார் மற்றும் பூமிநாதன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், அரசு துறைச் செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## காவிரி நதிநீர் பிரச்சினை: கர்நாடக அரசுக்குக் கண்டனம்!

# டெல்டா விவசாயிகளின் உரிமைகளை நிலைநாட்ட உறுதி!

## சட்டமன்ற அனைத்துக் கட்சிக் கூட்டத் தீர்மானங்களை விளக்கி முதல்வர் மு.க. ஸ்டாலின்!

**சென்னை, ஜூலை 18 -**

**சட்டமன்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் நேற்று முன்தினம் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் "டெல்டா விவசாயிகளின் உரிமைகளை நிலை நாட்ட அரசு சட்டப்பூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ளும்" என்று உறுதிபடக் கூறினார்.**

காவிரி நதிநீர்ப் பிரச்சினை தொடர்பான சட்டமன்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நேற்று முன்தினம் (16.07.2024) முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் தமிழ்நாட்டின் உரிமைகளைப் பாதுகாத்திடும் வகையில் நடைபெறும் இந்த அனைத்து சட்டமன்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டுள்ள

நீர்வளத்துறை அமைச்சர் அவர்களே,

சட்டமன்ற அனைத்துக் கட்சி தலைவர்களே,

தலைமைச் செயலாளர் அவர்களே,

அரசுச் செயலாளர் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்களே,

உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவிரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையினையும், மாண்பமை உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பினையும் பின்பற்ற மறுத்து, காவிரி ஒழுங்காற்றுக் குழுவின் ஆணையின்படி நமக்குக் கிடைக்க வேண்டிய குறைந்த அளவு தண்ணீரைக் கூட கர்நாடக அரசு வழங்க மறுத்து வருகிறது.

**ஆக்கப் பூர்வமான கருத்துக்களை வழங்கியமைக்கு நன்றி!**

இதனை முறியடித்து, தமிழ்நாட்டின் உரிமைகளை நிலைநாட்டி, காவிரி டெல்டா பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு தண்ணீர் கிடைக்கச் செய்வதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி பல ஆக்கபூர்வமான கருத்துக்களை இங்கு நீங்கள் தெரிவித்து இருக்கின்றீர்கள். அதற்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ்நாட்டுக்கு சட்டபூர்வமாக உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி, கிடைக்க வேண்டிய நீரினைச் சென்ற ஆண்டில் கர்நாடக அரசு விடுவிக்காததால், வேளாண் பெருமக்களுக்கு கடும் பாதிப்பு ஏற்பட்டது. இது குறித்து உச்சநீதிமன்றத்தை நாடித்தான் நீரைப் பெற்றோம்.

இந்த ஆண்டில் தென்மேற்கு பருவமழை சாதகமாக இருக்கக்கூடிய சூழ்நிலையிலும், கர்நாடகா அரசு இவ்வாறு நடந்து கொள்வதை எந்த விதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

எனவே, இந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துகளின் அடிப்படையில், ஒருமனதாக எடுக்கப்பட்டுள்ள இந்த முடிவுகளை நான் தீர்மானங்களாக இப்பொழுது படிக்கின்றேன்:

**தீர்மானங்கள்**

**1. காவிரி நடுவர் மன்றம் 5.2.2007 அன்று அளித்த இறுதித் தீர்ப்பையும், மாண்பமை உச்சநீதிமன்றம் 16.2.2018 அன்று அளித்த தீர்ப்பையும் அவமதிக்கும் வகையில், காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழு தற்போது ஆணையிட்டுள்ளவாறு தமிழ்நாட்டிற்கு காவிரி நீரைத் தர முடியாது என்று மறுத்துள்ள கர்நாடக அரசிற்கு இந்த அனைத்து சட்டமன்றக் கட்சிக் கூட்டம் தனது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.**

**2. காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு மற்றும் மாண்பமை உச்சநீதிமன்ற ஆணையின்படி, தமிழ்நாட்டிற்குக் காவிரி நீரை உடனடியாக விடுவித்திட கர்நாடக அரசுக்கு ஆணையிடுமாறு காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையத்தினை இந்த அனைத்து சட்டமன்றக் கட்சிக் கூட்டம் வலியுறுத்துகிறது.**

**3. காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு மற்றும் மாண்பமை உச்சநீதிமன்ற ஆணையின்படி, தமிழ்நாடு பெறவேண்டிய நீரை உடனடியாகப் பெறுவதற்கு, தேவைப்படின், மாண்பமை உச்சநீதிமன்றத்தை நாடி, அனைத்து சட்டபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள இக்கூட்டம் ஒருமனதாக தீர்மானிக்கிறது.**

இந்தத் தீர்மானங்களின் அடிப்படையில் தேவைப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் முழுமூச்சோடு மேற்கொண்டு, காவிரி டெல்டா விவசாயிகளின் உரிமைகளை இந்த அரசு நிலைநாட்டும் என உறுதியளிக்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## 8 சிறந்த கைவினைஞர்களுக்கு

# ‘வாழும் கைவினைப் பொக்கிஷம்’ விருது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, ஜூலை 18 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.7.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில், கைவினைத் தொழிலுக்காகவே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்ட 65 வயதுக்கு மேற்பட்ட 8 சிறந்த கைவினைஞர்களுக்கு வாழும் கைவினைப் பொக்கிஷம் விருதுகளையும், கைத்திறத் தொழிலின் பங்களிப்பு, அபிவிருத்தி மற்றும் படைப்புகள் ஆகியவற்றில் சிறந்த 10 கைவினைஞர்களுக்கு பூம்புகார் மாநில விருதுகளையும் வழங்கி சிறப்பித்தார்.**

கைவினைத் தொழிலுக்காகவே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்ட 65 வயதுக்கு மேற்பட்ட சிறந்த கைவினைஞர்களுக்கு தமிழ்நாடு அரசால் "வாழும் கைவினைப் பொக்கிஷம்" எனும் விருது வழங்கப்படுகிறது. கைவினைஞர்களை பாராட்டுவதற்கும், அவர்களின் திறனை ஊக்குவிப்பதற்கும், அதன்மூலம் திறனை வெளிக்கொணர்ந்து மற்றவர்களை ஊக்குவிப்பதற்கும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தால் இவ்விருது ஆண்டு தோறும் 15 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டு வருகிறது. வாழும் கைவினைப் பொக்கிஷம் விருதிற்காக ஒவ்வொரு பிரிவிற்கும் ஒருவர் வீதம் தலா 8 கிராம் தங்கப் பதக்கம், தாமிர பத்திரம், சான்றிதழுடன் ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலை வழங்கப்படுகிறது.

அதன்படி, 2022-23ஆம் ஆண்டிற்கான "வாழும் கைவினைப் பொக்கிஷம்" விருதுகளை காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ந.பாலகிருஷ்ணன் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த கே.பி. உமாபதி (பித்தளை கலைப்பொருட்கள்), திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த சா. ராஜகோபால் (சுடு களிமண்), திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த ந.மணி ஆச்சாரி (கற்சிற்பம்), கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த சி.முத்துசுவாமி ஆச்சாரி (கோவில் நகைகள்), தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த சு.கோவிந்தராஜ் (இசைக் கருவி),


தொடர்ச்சி 3 ஆம் பக்கம்




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (16.7.2024) சட்டப் பேரவைத் தலைவர் அறையில், சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள், விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற அன்னியூர் சிவாவுக்கு சட்டமன்ற உறுப்பினராக பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன், தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.